[1992 பிப்ரவரி 7

செல்வி கோ.மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளைப் பகுதி மீனவர்கள் நிறைந்த பகுதியாக இருப்பதால், இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, இன்னலுற்ற மீனவ மக்களுக்கு உடனடி மருத்துவ வசதி கிடைக்கும் பொருட்டு, அந்த இடத்தில் மருத்துவமனையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளையிலிருந்து சுற்றிச் சுற்றி மருத்துவ மனைகள் பல இருக்கின்றன. உதாரணமாக, கிள்ளையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் பரங்கிப்பேட்டை என்ற இடத்திலே ஒரு அரசு மருத்துவமனை இருக்கிறது. 4 கிலோ மீட்டர் தொலைவிலே புவனகிரி மற்றும் புதுச்சத்திரம் என்ற இரண்டு இடங்களிலேயும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அதே போல், 6 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள சிதம்பரம் நகரத்திலே ஒரு வட்ட தலைமை மருத்துவமனை இருக்கிறது. எனவேதான் அங்கு தேவையில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே, அதைச் சுற்றி நிறைய மருத்துவமனைகள் இருக்கிற காரணத்தால், தனியாக அங்கே மருத்துவமனையைத் துவங்குகிற நோக்கம் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 87, திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

கானாடுகாத்தான் பகுதியில் விமான நிலையம்.

87—

*1449 திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், கானாடு காத்தான் பகுதியில் சிறிய விமான நிலையம் ஏற்படுத்த மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் கானாடுகாத்தான் கிராமத்தில் சிறிய விமான நிலையம் ஏற்படுத்த மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யத் தற்போது அவசியமென்று கருதவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 88. திரு. ஜெ. பாலகங்காதரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.